அறத்தான் வருவதே இன்பம்

# தமிழ் அறம்



உள்ளே...

ஆசிரியர் தலையங்கம் ..................................... 1

நெஞ்சமே அஞ்சாதே நீ!

எது சமுதாயம்?..................................................2

சிலப்பதிகாரம்......................................................3

மக்கள் சக்தி இயக்கம் ..................................... 5

கவிதைகள். .......................................................... 6

சிந்தனை 7 செயல் 10 ஆசிரியர் மரு.த.இராசலிங்கம் .செப்டம்பர் 2025

**பண்புள்ள தமிழ்நெஞ்சங்களுக்கு வணக்கம்!**

## தலைவனும் தொண்டனும்!

அரசியல் தலைவனும் அவனைப் பின்பற்றும் தொண்டர்கள் பற்றியும் சில கருத்துகளை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அரசியல், சமயம், கல்வி, இலக்கியம் என்று எந்தத் துறையாக இருந்தாலும், அவற்றில் தன்னலமற்றத் தூயத் தொண்டு புரிந்தவர்களாலேயே நாட்டில் முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. சமுதாய நோக்கில் பார்க்கின்ற போது, அனைத்து துறைகளிலும் கால மாறுதல்களுக்கு ஏற்றவாறு நாம் முன்னேறி வருகின்றோம் என்பது உண்மைதான். ஆனால் எல்லாவற்றிற்கும் அடிப்படையாக, அச்சாக விளங்குகின்ற அரசியல் துறையில் மட்டும் நாம் மிகவும் கீழான நிலையில் இருக்கின்றோம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

தனக்குப் பின்னால் ஒரு கூட்டம் இருக்கின்றது என்ற நினைப்பை வைத்து மட்டுமே சிலர் அரசியல் கட்சி தொடங்கிவிடுகின்றனர். கூட்டத்தைப் பார்த்து தலைவன் மயங்கிவிடுகிறான். தலைவனுக்கு அரசியலில் ஓர் இலட்சியம் இருக்கலாம். தான் விரும்பும் மாற்றங்களைக் கொண்டுவரும் ஆசை இருக்கலாம். ஆனால் கட்டுப்பாடற்ற, முறைப்படுத்தப்படாத அந்தக் கூட்டத்தை வைத்து தான் விரும்பும் மாற்றங்களை ஒரு தலைவன் கொண்டு வந்துவிடலாம் என எண்ணுவது அறியாமையாகும்.

தன்னை நேசிக்கும் தொண்டர்களையே வழிநடத்தத் தெரியாத அல்லது முயற்சி மேற் கொள்ளாத தலைவன் எப்படி ஒரு நாட்டை வழிநடத்துவான் ? அவனால் நாடு என்ன நன்மை அடைந்துவிட முடியும் ?.

“சத்யசோதனையில்” மகாத்மா காந்தி கூறுகிறார். “தொண்டு” என்பது கண்டபடியெல்லாம் உடனே முளைத்துவிடக் கூடியதல்ல. அதற்கு முதலில் மனதில் விருப்பம் வேண்டும். பிறகு அனுபவமும் தேவை என்று. அரசியல் என்பதே ஒரு சமுதாயத்தை அல்லது தன் நாட்டு மக்களை இன்று இருக்கின்ற நிலையிலிருந்து அடுத்த நிலைக்கு உயர்த்துவதற்கானப் பணிதான். அதைச் செயல்படுத்துவதற்கான வாய்ப்பும், மக்கள் செல்வாக்கும் ஒருவனுக்கு அமையும் போது அவன் தலைவனாகப் பார்க்கப்படுகிறான். கூடவே தலைமைப் பண்பும், திடமான கொள்கைகளும், அவற்றை முன்னெடுப்பதற்கான செயல்திட்டங்களும் அமையும் போது மக்களால் ஈர்க்கப்படுகிறான். இந்த ஈர்ப்பு மட்டுமே மாற்றத்தைக் கொண்டுவந்து விடுமா? என்றால், நிச்சயமாக மாற்றம் ஏற்படாது.

அப்படியானால், தலைவன் எப்படியிருக்க வேண்டும்?. அவனது சிந்தனைகள், கொள்கைகள் எல்லாம் அவன் உள்ளத்திலிருந்து உதித்தவையாக இருக்க வேண்டும். அவன் தீட்டுகின்ற திட்டங்களை மக்களிடையே கொண்டு சேர்க்க, கட்டுக்கோப்பான அமைப்பை உருவாக்க வேண்டும். ஓர் அமைப்பு அல்லது அரசியல் கட்சியின் நன்மதிப்பு என்பது எப்படிப்பட்ட மனிதர் தலைமையேற்று நடத்துகிறார் என்பதோடு, கட்டுக்கோப்பான அமைப்பா? என்பதை வைத்தும் கணக்கிடப்படும்.

சொந்த வாழ்வில் சுயக்கட்டுப்பாட்டுடன் உள்ளவன்தான் பொதுவாழ்விலும் பிறருக்கு எடுத்துக்காட்டாய் விளங்க முடியும். சுயக்கட்டுப்பாட்டை இழந்து விடுகின்ற தலைவனும், தொண்டனும் தங்களது அமைப்புக்கு மட்டுமல்ல, சமுதாயத்துக்கும் தீமை செய்தவர் களாகவே இருப்பார்கள். தலைவர்கள் அரசியல் நாகரிகமற்றவர்களாக இருந்தால் அவர்களைப் பின்பற்றும் தொண்டர்களால் சமுதாயத்தில் தீங்குகளே நிகழும். பொதுமக்கள் எல்லோரையும் எடைபோட்டுக் கொண்டுதான் இருப்பார்கள்.



........அன்புடன் ஆசிரியர்

(20 ஆண்டுகளுக்கு முன்பு நான் எழுதிய தொண்டனுக்கு மடல்கள் நூலிலிருந்து)

## நெஞ்சமே அஞ்சாதே நீ!

டாக்டர். எம்.எஸ்.உதயமூர்த்தி

கவலையைச் சமாளிக்க முடியாதவன், பிரச்சனைகளுக்கு வழிகாண முடியாதவன் என்ன மனநிலை கொள்கிறான்?.பலர் விரக்தி அடைகின்றனர். “போனால் போகட்டும் போடா” என்று தத்துவம் பேசுகின்றனர். கவலையினால் குமைவதைவிட விரக்தி கொண்டு தத்துவம் பேசுவது மேல். ஆனால் விரக்தி நம்மை நாம் சமாதானம் செய்து கொள்ள உதவும் ஒரு சாதனம்.

நமது கவலையானது, நிகழ்ந்தவற்றை அல்லது நிகழப் போவது எதையாவது மாற்றுமா என்று சிந்தித்துப் பாருங்கள்.

கவலைப்பட என்று சிறிது நேரம் ஒதுக்கிக் கொள்ளுங்கள். மாலையில் அதற்கென்று பத்து நிமிடம் ஒதுக்கிக்கொண்டு அன்றைய கவலைகளையும், நாளைய கவலைகளையும் பற்றி வரிசையாகக் கவலைப்படுங்கள். கன்னத்தில் கையை வைத்துக் கொண்டு, முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு கவலைப்படுங்கள். பத்து நிமிடம் ஆனவுடன், இன்றைக்குக் கவலைப்பட்டாயிற்று என்று சொல்லிவிட்டு மற்ற நேரங்களை மகிழ்ச்சியுடன் செலவிடுங்கள்.

நேற்று கவலைப்பட்டதை எல்லாம் சில மாதங்கள் கழித்துப் புரட்டிப் பார்த்தால் எப்படி உப்புப் பெறாத விடயங்களுக்கெல்லாம் கவலைப்படுகிறோம் என்பது தெரியவரும்.



கவலைப்படும்போது, ஏதோ ஒரு காரியத்தை தள்ளிப் போட இதைச் சாக்காக உபயோகிக்கிறோம் என்ற உண்மைத் தெரியவரும்.

நம் நாட்டில் உள்ள சாமியார்களை எல்லாம் “சர்வே” செய்தால், கவலையின் தாக்கத்தால் விரக்தி அடைந்து சாமியார் ஆனவர்களே அதிகமானோர் என்பது புரியும். நண்பர்களே! கவலைப்பட்டே வாழ்க்கையைக் கடத்தி விடாதீர்கள்!

..............நன்றி கங்கை புத்தக நிலையம்

## எது வேண்டும்?

முனைவர்.லெ.பாஸ்கர்

அறிவு நமக்கு அதிகாரத்தை வழங்கலாம். ஆனால் நம்முடைய நற்குணங்கள்தான் மதிப்பு, மரியாதையைப் பெற்றுத்தரும். மான் எவ்வளவு அழகாக இருந்தாலும் புலி அதை ரசித்துப் பார்ப்பதில்லை, மாறாகப் புசித்துப் பார்க்கவே விரும்பும். புலியின் ஆணவம் அதைச் செயல்படுத்தத் தூண்டும். தவளை, தான் போடும் சத்தத்தால் பாம்புக்கு அழைப்புவிட்டு இரையாகும். அதன் வாய்க்கொழுப்பு - அதிகம் இரைச்சல் போடுவதால் இரையாகின்றது. தேள் கொட்டினால் அது கொல்லப்படுகிறது. காரணம் தேளுக்கு அவ்வளவு அவசரம்! உயிரினங்களில் புலியின் செயல் - ஆணவம், தவளையின் செயல்- ஆரவாரம், தேளின் செயல் - அவசரம். இவையெல்லாம் இயற்கையின் படைப்பு. மாற்றிக் கொள்ள முடியாதவை.

அதேபோல் மனிதனும் ஆணவம் கொண்டு, அடக்கமின்றி, அவசரப் புத்தியோடு அலைந்தால் என்னவாகும் ? எனவேதான் எதிலும் நிதானம், பொறுமை போன்ற நற்குணங்கள் மனிதனுக்காக வகுக்கப்பட்டுள்ளன. அவற்றைக் கடைப்பிடித்து வாழ்ந்தால் மனித வாழ்க்கை சிறப்புறும், சீர்மை பெறும்.

பழகும்போது நேர்மையாகவும், நேசிக்கும்போது உண்மையாகவும், செயல்படும்போது நேர்த்தியாகவும், பேசும்போது பொய்கலக்காமலும் நட்பு கொண்டால் வீடும் - நாடும் நாளும் நம்மை நாடும். எப்போதும் நம் உறவைத் தேடும்.

எனவே, வாழ்க்கையில் எது வேண்டும் என்பதைத் தெளிந்து, நற்குணங்களைத் தேர்ந்தெடுத்து வாழ்ந்தால், மனிதனாக மதிப்புடன் வாழலாம், மகிழ்ச்சியாக நாளும் வாழலாம்!



**வஞ்சிக்காண்டம்.** **சேரன் செங்குட்டுவன், வடநாட்டின் மீது படையெடுத்துச் சென்று ஆரிய மன்னர்களை வென்று, கனக விசயர்களின் தலைகளில் கல்லேற்றிக் கொண்டு வந்து கண்ணகிக்கு சிலை அமைத்த வரலாறு கூறும் பகுதி.** **மரு.த.இராசலிங்கம்**

சேரமாமன்னன் செங்குட்டுவன், வஞ்சிப் பூவினைத் தன் அழகியத் திருமுடியிலே சூட்டி, யானை மீதேறி, போர்க்கோலம் பூண்டு, வடநாட்டுக்குப் படைப்பெருக்கோடு செல்கிறான். **ஆடகமாடத்து** (திருவனந்தபுரம்)திருமாலின் சேடத்தை அவனுக்கு அளித்துப் போற்றுகின்றனர் சிலர். அதை அவன் தன் தோளில் அணிந்து கொண்டு, வஞ்சி நகரிலிருந்து அணிஅணியாகச் செல்லும் தன் படையுடன் நீலகிரி வந்தடைகிறான். **நீலகிரி** மலையில் பாசறை அமைத்துத் தங்குகிறான். அப்போது அங்கே கொங்கண நாட்டுக் கூத்தர், கருநாடக நாட்டுக் கூத்தர் மற்றும் ஆடல் மகளிரும் வந்து ஆடிப்பாடி மகிழ்விக்க அவர்களுக்குப் பரிசுகள் வழங்கி மகிழ்கிறான் மன்னன். அவ்வேளையில் வாயிற்காவலன் வந்து வணங்கி, **சஞ்சயன்** என்னும் மன்னன், பெரும் படையுடன் வந்துக் காத்திருப்பதாக அறிவிக்க, சஞ்சயனை வரச்சொல்கிறான் செங்குட்டுவன். சஞ்சயன் வந்து செங்குட்டுவனை வணங்கிப் போற்றி, "செங்கோல் வேந்தே! வடதிசை நோக்கிச் சேரமான் புறப்படுவது பத்தினித் தெய்வத்துக்குச் சிலை வடிக்க ஒரு கல்லைக் கொணர்வதற்காக என்றால், அதை இமயத்திலே எடுத்து, கங்கையிலே நீராட்டி தாம் எடுத்து வர தங்களுடன் நட்பு பாராட்டும் **கன்னர்கள்** ஆயத்தமாக இருக்கிறார்கள்" என்று சொல்ல, சேரமான் அவனை நோக்கி, "கல் கொண்டு வருவது மட்டும் நோக்கமல்ல, அருந்தமிழரின் ஆற்றல் அறியாது, பிற மன்னருடன் கூடி, நம்மை நகையாடிய வடதிசை ஆரிய மன்னர்கள் கனகன், விசயன் இருவருக்கும் பாடம் புகட்டவே நான் செல்கிறேன். கங்கையாற்றைக் கடப்பதற்கு வேண்டிய ஓடங்களை அமைக்குமாறு கன்னர்களிடம் கூறுங்கள்" என்று ஆணையிட, சஞ்சயனும் அவ்வாணையை ஏற்றுக் கொண்டு செல்கிறான்.

பின்னர் நீலகிரியிலிருந்து புறப்பட்ட சேரமன்னன், படையுடன் வடதிசை நோக்கிச் செல்கிறான். கன்னரின் உதவியால் அமையப்பெற்ற மரக்கலன்களில் கங்கையாற்றைக் கடந்து **உத்தர நாட்டை** அடைந்து அங்கு பாசறையிட்டு எதிரிகளை எதிர்நோக்கிக், காத்திருக்கிறான்.

"தென்னகத்துத் தமிழரின் ஆற்றலை யாமும் காண்போம்!" என்று உத்திரன், விசித்திரன், உருத்திரன், பைரவன், சித்திரன், சிங்கன், தனுத்திரன், சிவேதன் என்று சொல்லப்படும் வடதிசை மன்னரெல்லாம் ஒன்று சேர்ந்து, அவர்களுடன் கனக, விசயனும் பெரும்படையுடன் ஒன்று கூடி போரிட வருகின்றனர்.

சேரன் செங்குட்டுவன் படைகளின் தாக்குதலைத் தாக்குப்பிடிக்க முடியாமல் ஆரிய மன்னர்களின் படைகள் நாற்புறமும் சிதறி ஓட, **கனகனும், விசயனும்** அகப்பட்டுக் கொள்கின்றனர். இமயத்தில் கல் எடுத்துக்கொண்ட மாமன்னன், அதனை அவர்களின் தலைகளில் ஏற்றி வைத்து அழைத்து வருகின்றான். எல்லோரும் கங்கையின் தென்கரையை அடைகின்றனர். கங்கையில் கல்லினை நீர்ப்படை செய்த பின்னர், கன்னர்கள் அழகுற அமைத்த அரண்மனை போன்ற பாடிவீட்டிலே செங்குட்டுவன் தங்கியிருக்கின்றான்.

அப்பொழுது அங்கே மறையோன் **மாடலன்** வருகின்றான். மன்னனை வாழ்த்துகின்றான். "மாதவி மடந்தை கானற் பாணி கனக விசயர்தம் முடித்தலை நெரித்தது" என்று அவன் உரைக்க, அதன் விளக்கம் என்ன என்று செங்குட்டுவன் வினவ, கோவலன் – மாதவி குறித்த நிகழ்வுகளைக் கூறுகின்றான் மாடலன். அத்துடன் கண்ணகி மதுரையை எரித்தப் பிறகு நடந்த நிகழ்வுகளை யெல்லாம் எடுத்துரைக்கின்றான்.

கோவலன் கொலைக்களத்தில் மாண்ட செய்தியறிந்த **கவுந்தியடிகள்,** மிகவும் வருந்தி, உண்ணாநோன்பிருந்து தன் உயிரைப் போக்கிக் கொள்கிறார். **மாதரி**யோ மனம் வெதும்பி, என்னிடம் அடைக்கலமாக ஒப்படைக்கப்பட்டவர்களைப் பேணாது இழந்துவிட்டேனே என்று கதறியபடி, தீய்க்குள் பாய்ந்து இறந்துவிடுகிறாள். கோவலனுக்கு நேர்ந்த பழியும், சாவும், அதனால் கண்ணகிக்கு நேர்ந்த துன்பமும் கேள்வியுற்ற கோவலனின் தந்தை, தன்னுடைய செல்வங்களையெல்லாம் தானமாக அளித்துவிட்டு துறவியாகிவிட, கோவலனின் தாயோ துன்பத்தை பொறுக்க முடியாமல் இறந்துவிடுகிறாள். கண்ணகியின் தந்தை, துறவறம் பூண, தாயோ உயிரை மாய்த்துக் கொள்கிறாள். **மாதவி** துறவறம் பூண்டதோடு தன் மகள் **மணிமேகலை**யையும் துறவியாக்கி விடுகிறாள்.

.....அடுத்த இதழில் நிறைவு பெறும்.

# சங்க இலக்கியத்தில் உவமையழகு
# கலித்தொகை -- குறிஞ்சிக்கலி

விரைவில் வந்துவிடுவதாகத் தலைவியைத் தலைவன் பிரிந்து செல்கிறான். ஆனால் சொன்னபடி வரவில்லை. தலைவியும், தோழியும் பாறை உரலிலே மூங்கில் நெல்லைப் பெய்து, சேம்பின் இலையை சுளகாகக் (முறமாக) கொண்டு, யானைக்கொம்பு உலக்கையால் பாடிக்கொண்டே நெல் குற்றுகின்றனர். தலைவி, தன்னைப் பிரிந்த தலைவனின் மலையின் வளத்தைப் பழிக்கிறாள். தோழியோ அவளுக்கு ஆறுதல் கூறிப் புகழ்கிறாள். அவளின் ஆறுதல் மொழிகளிலே உவமையழகைப் பொழிகின்றார் கபிலர்.

குன்று அகன்ற நாட்டினனான உன் தலைவன் வராமல் பொய்த்துவிடுவான் என்றால், அது நிலவிலே தீ தோன்றியது போன்றது! என்று தோழி உரைத்ததாக நயம்படக் கூறுகிறார் கபிலர்.

**குன்று அகல் நல் நாடன் வாய்மையில் பொய் தோன்றின்,**
**திங்களுள் தீத் தோன்றியற்று** என்றதைப் பாடுகிறார்.

மேலும் கபிலர், உன் தலைவன் வராமல் போனால், அது நிழலில் உள்ள குளத்து நீருள்ளே கிடக்கும் நீலமலரில் பெருநெருப்பு எழுந்த கதை போன்றது என்று தோழி உரைத்ததாகக் கூறுகிறார்.

**ஈரத்துள் இன்னவை தோன்றின், நிழற் கயத்து**
**நீருள் குவளை வெந்தற்று** எனப் பாடுகிறார்.

அத்துடன் கபிலரின் உவமை உள்ளம் அமைதிப் பெறவில்லை. தலைவியைப் பார்த்து தோழி, உன் தலைவன் கைவிட மாட்டானடி, மலைத் தொடரின் தலைவன் கைவிடவே மாட்டான். அவன் உறவினில் குற்றம் தோன்றுமோ? தோன்றினால் அது ஞாயிற்றினுள்ளே இருள் தோன்றியது போலத்தான்! என்று கூறித் தேற்றுகிறாள். இதைக் கபிலர் இவ்வாறுப் பாடுகிறார்.

**துறக்குவன் அல்லன், துறக்குவன் அல்லன்**
**தொடர் வரை வெற்பன் துறக்குவன் அல்லன்-**
**தொடர்புள் இனையவை தோன்றின், விசும்பில்**
**சுடருள் இருள் தோன்றியற்று.**

கபிலரின் உவமையழகில் நம் உள்ளம் நெகிழ்ந்து போகிறது. தோழியின் வாக்கும் மெய்யாக, தலைவன் வருகிறான். தலைவியை மணம் முடிக்கிறான். “**ஞாயிற்றினுள் இருள்**” என்ற கபிலரின் சொல்லாடலில் இருந்து பிறந்ததுதான் “**சூரியன் கருக்குமா?**” என்ற திரைப்படப் பாடல் வரிகள்.

........உவமையழகு தொடரும்.

**மரு.த.இராசலிங்கம்**

## வாழ்க்கை வரம்தான்

வாழ்க்கை வரம்தான்
ஒருமுறையே
வாழ்வும் வளமும்
இறையருளே!
ஏழ்மை வறுமை
இடைப்பொழுதில்
யார்க்கும் இயல்பே!
நடைமுறையில்
தாழ்வும் உயர்வும்
சரிவுகளும்
தாக்கம் தருமே
தலைமுறைக்கும்
மூழ்கும் நிலையில்
மனிதமிங்கே
மூச்சு கொடுக்க
மனிதரெங்கே?

வீழ்த்த முடியா
விரதமிரு
வீறு பெறவே
விரைந்து எழு!
சூழ்ச்சி வலையை
அறுத்து எறி
சூதுபுரிவோர்
சொல்வரோ நெறி ?
கூழுக்கே அலைவார்
கோலம் அறி
கோபம் தவிர்த்தே
குளிர்ச்சி விரி!
யாழின் நரம்பாய்
இருந்து விடு
யாக்கை விழுமுன்
அருமை பெறு!

பாவலர்.சு.சண்முகசுந்தரம்
புதுச்சேரி

***பண்புள்ள தமிழக மக்களே!***

- வளமான வாழ்வுக்கும், உயர்வுக்கும் முழுமையான மதுவிலக்கை, போதைப் பொருள் ஒழிப்பை ஆதரிப்பீர்!
- நல்ல மதுவோ, கள்ள மதுவோ இரண்டுமே உடலுக்கும் உள்ளத்துக்கும் கேடுதான்.
- நல்ல மது என்று அருந்தினால், அது மெல்ல மெல்லக் கொல்லும், கள்ள மதுவோ உடனே கொல்லும்!
- இயற்கைக்கு முரணானது போதை!
- இல்லறத்துக்கு எதிரானது போதை!
- பழிபாவங்களைச் செய்யத் தூண்டுவது மது!
  நண்பனையும் பகைவனாக்கும் அது!
- உடலையும் கெடுத்து, உயிரையும் பறித்துக் குடும்பத்தை நடுத்தெருவில் நிற்க வைக்கும் மதுவை நாடலாமா?
- மதுவாசனை இந்த மண்ணின் வாசனையாகாமல் தடுப்போம்!

**தமிழ்அறம் மின்னிதழ் வெளியிடுபவர்**
**மரு.த.இராசலிங்கம். MBBS.,Dip.Diab**
**மாநிலத் தலைவர். மக்கள் சக்தி இயக்கம்**
**4/16, இராம் நகர். தூத்துக்குடி.628002**

## வஞ்சகத்தை வெல்லட்டும்

உதயங்கள்
கிழக்கில்
பொய்த்ததில்லை!

உண்மை கோபுரம்
சரிவதில்லை!

அலைகள்
கடலில்
ஓய்வதில்லை!

நம்பிக்கைத் தேர்
சாய்வதில்லை!

கொள்கைகள்
மலை முகட்டில்!

வேள்வித்தீ
மனதின் உச்சத்தில்!

பாதுகாப்புக்
கவசம்
கைகளிலுண்டு!

போர்க்களத்திற்கு
வாளுண்டு!

கால்கள்
பம்பரமாய்
சுழலட்டும்!

காலங்களின்
வஞ்சகத்தை வெல்லட்டும்!

கவிஞர். கலியுகன் கோபி. சென்னை

## இன்னுமொரு விடுதலை..

அந்நியரை விரட்டிட
அன்றொரு விடுதலை
பந்தியாய் நின்றே
பாய்ந்தே எதிர்த்தனரே

சொந்த விரலே
சூலமாய்த் தாக்கிட
நிந்தனை செய்வோமே
நித்தமும் நிமிடமும்

நாட்டைச் சூறையாடும்
நயவஞ்சக நரிகளுக்கும்
கோட்டானாய்க் கத்தும்
கூட்ட ஊழலுக்கும்

நிதியே முதன்மையாய்
நிமிர்ந்து நிற்போர்க்கும்
நீதி நியாயம்
நேர்மை கெட்டோர்க்கும்

கதியெனக் கலங்கி
காலமும் தவிப்போரை
சதிவலையில் வீழ்த்தும்
சண்டாள கும்பலுக்கும்

பொதுநலம் தவிர்த்து
புழுதியில் வீழ்த்தி
சுயநலம் காக்கும்
சூழ்ச்சிக் காரருக்கும்

உண்மை உணர்த்திடவே
நன்மை பெருக்கிடவே
திருந்தா மனங்களின்
தீமை பொசுக்கிடவே

இனிமையாய் வாழ்ந்திடவே
இன்பங்கள் துய்த்திடவே
வேண்டும் இன்னுமொரு
விடுதலை நாட்டிற்கே!

கவிஞர்.ஆசிரியர். க.தேவிகா
தூத்துக்குடி